# JANAVINODINI.

# ஜநவிநோதிநி.

இல. 9, 10.] {செப்டெம்பர்மீ அக்டோபர்மீ} 1878. [புஸ்த. IX.

CONTENTS.

Badge of the Order of the Crown of India ............ ... ....... 201
Avoid the workshop of Scandal... 202
Wealth and Luxury ............ 206
Lightning Conductors .......... 209
Old Deccan Days .............. 211
On the Study of Entomology. (Con.) 224
Baba Abdalla, the Blindman .... 228
The Earth's Crust ... ... .... 231
Three Princes ............... 234
The Child's Corner ............ 237
News ........................ 240

அட்டவணை.

இந்துதேச மகுடவல்லி பீடத்தார் பதக்கம் .................... 201
பழிப்பனபகரேல் ................ 202
செல்வமும் சுகானுபவமும் ...... 206
மின்வாங்கிகள் ................ 209
தக்காணத்துப் பூர்வகதை ........ 211
கிருமிசாஸ்திரப்பயர்ச்சி (தொடர்.) 224
பாபா அப்துலா எனும் அந்தகன். 228
பூமியின் மேற்புரணி ............ 231
மூன்று ராஜகுமாரர்கள் .......... 234
சிறுவர்க்கான கதை (12) ... ... 237
சமாசாரம் .................... 240

MADRAS:

Published by the

MADRAS SCHOOL BOOK AND VERNACULAR LITERATURE SOCIETY,

AND SOLD AT THEIR DEPOSITORY, OLD COLLEGE.

# NOTICE.

☞ A series of interesting Tales from *"Old Deccan Days"* hitherto unknown to the Tamil country is now appearing in Janavinodini.

**Also**

## A "CHILD'S CORNER"

HAS BEEN OPENED

*Giving a new tale each month written expressly for Little Folks.*

☞ We shall be thankful if our Readers will shew a few Numbers of *Janavinodini* to their relatives and friends in the country. We are anxious to have a larger circulation in the Tamil Districts.

இதுவரையில் நமது நாட்டில் வழங்காத

## தக்காணத்துப் பூர்வகதை

என்னும்

விநோதமான புதிய கதைகள்

இப்பத்திரிகையின்

பிரதிமாசச் சஞ்சிகையில் சிற்சிலவாய்ப்

பிரசுரஞ்செய்யலாகும்.

இப்படியே


## சிறுவர்க்கான கதை

என்று

சில நூதன கதைகள்

மாதம் ஒவ்வொன்றாகப் பிரசுரமாகிவருகின்றன.

☞ இந்த ஜநவிநோதினியை வாசிக்கும் நாட்டுக்கையொப்பக்காரர்கள் தங்கள் பந்துமித்திரர்களுக்கும் சில ஸஞ்சிகைகளைக் காட்டிப் படிக்கச்செய்யும்படி வேண்டுகிறோம். நாட்டுக்கையொப்பக்காரர் அதிகரிப்பது இந்தப் பத்திரிகையின் பிரயோஜனமாக இருக்கும்.



BADGE OF THE ORDER OF THE CROWN OF INDIA.

இந்துதேச மகுடவல்லிபீடத்தார்

பதக்கம்.

ருள்களுடைய தன்மையையும் அளவையும் குணத்தையும் முடிவையும் நன்ருய் அறிந்திருப்பவர்கள், அந்தப் பொருள்களைக்கண்டு களிப்படைய வல்லமையுடையவர்களாயிருந்தாலும், அதேகாலத்தில் அவர்களுக்கு இவ்வுலகத்துப் பொருள்களெல்லாம் வீணனவையென்றும், திருப்திகரமானவையல்லவென்றும் தோன்றுகின்றன. ஆதலால், அவை வீணனவையென்னும் எண்ணமும்கூட உண்டாவதனுல், அந்தச் சுகானுபவமும் சிறந்ததன்று. அறிவோ எல்லாவற்றையும் நன்ருய் விளக்கிக்காட்டிப் பேரின்பத்தைத் தருகின்றதாதலால் அதனுல் உண்டாகும் ஆநந்தத்திற்கு ஒப்பான தொன்றுமில்லை.

## மின்வாங்கிகள்.

மின்னலை வாங்கிக்கொள்ளுகிறவைகளுக்கு மின்வாங்கிகளென்று பெயர். உலோகத்தினுல் செய்யப்பட்ட கம்பிகளைக் கட்டடங்களின் உன்னத ஸ்தானங்களிலிருந்து பூமிக்குள்ளே அழுந்தியிருக்கும்படிப் பதித்திருப்போமானுல், அக்கட்டடங்களுக்கு மின்னலால் சேதமுண்டாகிறதில்லையென்று காண்கிருேம். இதன் காரணம் எளிதில் புலப்படும். உலோகக்கம்பிகளை நிலத்தோடு சம்பந்தப்படும்படி அமைத்துவைத்திருந்தால்மட்டுமே மின்சாரம் அவற்றின் மார்க்கமாய்ப் பூமிக்குள் செல்லுகிறதென்றும், அப்படிக்கின்றி உலோகங்களினுல் செய்யப்பட்ட கம்பிகளுக்குப் பதிலாகக் கண்ணுடிக் கம்பிகளை வைத்திருந்தால் மின்சாரம் அதின் வழியாய்ப் பூமிக்குள் செல்லுகிறதில்லையென்றும் கண்டறியப்பட்டிருக்கிறது. நாம் நமது கைவிரலை நீட்டி, மின்பொறி பறக்கும்படி மின்யந்திரத்தைக் கையாடி, ஒரு கையில் உலோகக்கம்பியை எடுத்துக்கொண்டு, அதன் நுனியில் மற்ருெரு கையின் விரல் பொருந்தும்படிசெய்து, இவ்விரண்டையும் அந்த யந்திரத்தின் பிரதான மின்வாங்கிக்கு அருகே பிடிப்போமானுல், மின்னின் ஒரு பொறிகூட நமது கையில் ஏருமல் உலோகக்கம்பிக்குச் செல்லுமென்றும், அந்தக் கம்பி நீளமாயிருந்து நிலத்தோடு சம்பந்தித்திருக்குமானுல் மின்சாரம் அதன்வழியாய்ச் செல்லுமாகையால் நமது தேசத்திற்குள் புகுகிறதில்லையென்றும் காணலாம். இவ்வாறின்றி, உலோகக் கம்பிக்குப் பதிலாகக் கண்ணுடிக் கம்பியை மேற்சொன்னவண்ணம் வைத்துப்பார்த்தால், மின்சாரம் அதில் பற்ருமல் விரலில் தாவி நமது தேகத்தின் வழியாகப் பூமிக்குள் செல்லுமென்பதை நாம் காண்போம். ஆதலால், மின்னலும் இடியும் அதிகமாகப் பெரும்புயலடிக்குங் காலத்திலும் நமக்கருகே உலோகக் கம்பியை

நாட்டியிருப்போமாயின் மேலே காட்டியவண்ணமே அது நம்மைத் தொடாமல் அந்தக் கம்பியின் வழியாகப் பூமிக்குள்ளே செல்லும். இப்படிக்கின்றிக் கண்ணுடிக் கம்பியை நம்மண்டை நாட்டியிருப்போமாயின், மின்சாரம் அதில் செல்லாது நமது தேகத்தின் வழியாகப் பூமிக்குட்செல்லுமாகையால், பெரும்பான்மையாய் அபாயத்திற்கிடமாகும். மின்வாங்கிகளின் கூறுபாடு இத்தன்மைத்து. மின்சாரத்தை வாங்குவதற்கு ஏற்றவை எவையோ அவற்றின் வழியாகத்தான் அது செல்லும். சாதாரணமாய் நாம் நமது வீடுகளைக் கட்டுவதற்கு உரியவைகளாகிய கல், மரம் முதலியவற்றைவிட உலோகங்கள் மின்சாரத்தை எளிதில் கவர்வதற்கு ஏற்றவைகளாதலால் அவற்ருல் செய்யப்பட்ட நெடுங்கம்பிகளை நமது வீடுமுதலியவற்றின் உச்சிக்குமேனின்று நிலத்தோடு சம்பந்தப்படும்படி நாட்டிவைப்போமானல், அவற்றிற்கு மின்னலால் தீங்குவிளையாது. கம்பி எவ்வளவுக்கெவ்வளவு உயரமோ அதற்கு இரட்டிப்பான தூரமுள்ள சுற்றுப்புறம் இடிவிழாமல் ரக்ஷிக்கப்படுகிறதென்று பரிக்ஷித்தறிந்திருக்கிருர்கள். ஐம்பது அடி உயரமுள்ள கம்பி வைக்கப்பட்டிருந்தால், அக்கம்பியைச் சுற்றிலும் நூறு அடிவரைக்கும் இடிவிழாது. மின்னலின் கூறுபாட்டை அறிந்துகொள்வதினுல், அதனுலுண்டாகும் அபாயத்தினின்றும் விலக வழியுண்டு.

ஆகாயத்தில் மின்தாது ஒன்ருய்ச் சேர்வதனுல் கல்மழை பெய்யுமென்று, பிரான்சுதேசத்தார் தங்கள் திராக்ஷைத்தியங் காய்க்கிறவிடம் சேதப்படாதபடி அங்கே மின்வாங்கிக் கம்பங்களை நாட்டிவைப்பதுண்டு. ஆராகோ என்னும் வித்துவான் ஒருவர்: அக்கம்பக்கங்கள் உயரமாயிருக்கவேண்டுமென்றும், மற்றும் அவற்ருேடு மின்யந்திரங்கள் சேர்க்கப்பட்டிருப்பதுடன் கம்பிகளாவது சங்கிலிகளாவது அவற்றினின்றும் பூமியோடு சம்பந்தப்படுத்தப்பட்டிருக்கவேண்டுமென்றும் சொல்லுகிருர். விநோதமான மற்ற மின்வாங்கிகளைப்போலவே இதுவும் நன்ருய்ப் பயன்படுகிறதென்ருலும், அதிக விலைபெற்றதாகையால், இதை நாடெங்கும் வாங்கிவைப்பதற்கு வாய்க்கவில்லை. சிறிய பெண்குழந்தை ஒன்று தன் தலையில் வைத்திருந்த பொன்னூசியும், ஒரு சீமாட்டி தன் கையில் அணிந்திருந்த கடகமும் மின்னலால் உருகிப்போயிற்றே அன்றி, அதனுல் அவற்றைத் தரித்திருந்தவர்களுக்குத் தீங்கொன்றுமில்லை. வேட்டையாடுகிறவர்கள் தாங்கள் வைத்திருக்கும் ஆயுதங்களில் இரும்பிருப்பதனுல், அவர்களுக்கு மின்னலால் அபாயமுண்டாகிறதுண்டு. இதைப்பற்றித்தான் யாரோ வித்துவான் ஒருவர், பாதி பரிகாசமாகவும் பாதி மெய்யாகவும் மின்னும்போது நடக்கிறவர்கள் தங்கள் கைக்குடையோடு, உலோகத்தினுற் செய்யப்பட்ட கம்பியொன்றைச் சேர்த்துவைத்திருக்க

வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். குடையின் நுனிப்பூணி னின்று கூரிய கம்பியொன்றைச் சேர்த்துக்கட்டி அதற்குமேலே ஆகாயத்தை நோக்கிநிற்கும்படிசெய்து, அந்தப் பூணினின்று நமது பின்பக்கமாய் நிலத்திற் பரவும்படி மெல்லிய கம்பிகளைத் தொங்க விட்டிருப்போமானால், நம்மைச் சுற்றிலும் மின்னலும் இடியும் எவ்வளவுதான் மின்னிக் குமுறினும் நாம் சற்றுவது அவற்றிற்கு அஞ்சவேண்டுவதில்லை. அதிகமாய் மின்னும்காலத்தில் நாம் மின் வாங்கிகளில்லாதவிடத்தை விட்டு விலகி, சிறந்த மின்வாங்கிகள் நிலத்தோடு பொருத்தப்பட்டிருக்குமிடந்தேடிச் செல்லவேண் டும். உருக்குச்சீரா கவசமுதலியவைகளைப் பூண்டிருப்பவனுக்கு அதுவே அவனைச் சுற்றிலும் நல்ல மின்வாங்கிகளாகின்றமையால், அவனுக்கு மின்னலால் அபாயமுண்டாகாது; இதனோடு அவனு டைய பாதரக்ஷையின் அடிப்புறத்தில் கூரிய இருப்புமுட்களும் நிலத்தில் படும்படி பொருத்திவைக்கப்படுமானால் அவனுக்கு மின் னலால் சற்றேனும் அச்சம்வேண்டாம் என்பது நிச்சயம். இதே காரணத்தினால், இருப்புக்கட்டிலில் படுத்திருப்பவனுக்கு மின் னல் தீமையொன்றுஞ் செய்யாது.

மின்னும்போது மாமுதலியவற்றண்டை நாம் நிற்கலாகாது. ஏனெனில், மின்சாரமானது எப்பொழுதும் உன்னதமானவற்றை யே தாவிப் பற்றிவரும். அப்படி உயரமுள்ள பொருள்கள் மனி தர்களிலும் சிறந்த மின்வாங்கிகளாயிராவிட்டால், அவற்றின் அருகேயுள்ள மனிதர்களின்மேல் பாயுமாதலால், விலகிநிற்பதே நன்று.

## தக்காணத்துப் பூர்வகதை.

அரக்கர் மாளிகை.

நெடுநாளைக்குமுன் அரசன் ஒருவன் இருந்தான். இரண்டு பெண்களைப் பெற்றுவிட்டு அவன் மூத்தமனைவி இறந்துபோ னாள். அவள் இறந்துபோன சிலநாளைக்கெல்லாம் அவனுக்கு மறுவிவாகமாயிற்று. அந்த இளையாள் அரசன் வீட்டுக்கு வந்த நாள்முதல் மூத்தாளுடைய பெண்களிருவரையும் மிகவும் பகை த்து, அவர்களுக்குப் பலவிதமாய்ப் பொல்லாங்குசெய்துவந் தாள். அந்த ராஜாவும் தன் பெண்களை விசாரிக்கவேண்டிய வரு த்தத்தைத் தான் ஏற்றுக்கொள்ளாமல் எல்லாம் தன் மனையாள் அதீனமாயே விட்டுவைத்தான். ஆதலால் அந்த ராணி அப்பெண் களை என்னசெய்தாலும் கேட்பாரில்லை. அக்கொடியவள் கையில் அகப்பட்டுக்கொண்டு அந்தப் பெண்கள் பட்டவருத்தம் இப்படிப்

பட்டதென்று சொல்லக்கூடாது. அவள் படுத்துகிற பாட்டைப் பொறுக்கமாட்டாமல் ஒருநாள் அப்பெண்களுள் ஒருத்தி மற்ருெருத்தியைப் பார்த்து: பெண்ணே! இவ்விடத்தில் நாம் இப்படிப்பட்ட துக்கப்பிழைப்பு பிழைப்பதைவிட, நாக்கைப்பிடுங்கிக் கொண்டு சாகலாம். காட்டுக்கு ஓடிப்போய்க் காய் கிழங்குகளையாவது தின்று பிழைக்கலாம் வா என்று சொல்லி அவளையும் அழைத்துக்கொண்டு காட்டுக்குப்போய்க் காய்கனிகளைத் தின்று கொண்டு சிலகாலம் அங்கேயே திரிந்துகொண்டிருந்தார்கள்.

இப்படி அவர்கள் காட்டில் அல்லாடிக்கொண்டிருக்கையில், ஒருநாள் நடுக்காட்டில் மிகவும் அற்புதமான மாளிகை ஒன்றிருக்கக்கண்டார்கள். அது ஒரு ராக்ஷதனுடைய மாளிகை. இப்பெண்கள் போய்ப் பார்த்ததருணத்தில் அம்மாளிகைக்கு உடையவனான ராக்ஷதன் தன் மனையாளோடுகூட வெளியே போயிருந்தான். அந்த மாளிகையைக் கண்டு அப்பெண்களுள் ஒருத்தி: நடுக்காட்டிலிருக்கின்ற இந்த அரண்மனை ஒரு ராக்ஷதனுடையதாயிருக்குமே ஒழியப் பின் யாருடையதாயுமிராது. ஆனால் உடையவன் வெளியில் போயிருப்பதுபோல் காண்கிறது. இத்தருணத்தில் நாம் உள்ளே நுழைந்து தின்பண்டம் ஏதாவது வைத்திருக்கிறதா பார்ப்போம் என்று சொல்ல, அப்படியே இருவரும் உள்ளே நுழைந்து பார்த்தார்கள். கொஞ்சம் அரிசி அகப்படவே அதைச் சமைத்துப் புசித்துவிட்டு அம்மாளிகையை நன்ருய்ப் பெருக்கிச் சீர்ப்படுத்திக்கொண்டிருக்க, அத்தருணத்தில் காட்டுக்குப்போயிருந்த ராக்ஷதன் தன் மனையாளோடு திரும்பிவந்தான். அவனைக்கண்டு அந்தப் பெண்கள் பயந்து உடனே மெத்தைமேலேறி ஒரு மூலையில் ஒளித்துக்கொண்டார்கள். அவ்வொளிப்பிடத்திலிருந்து அம்மாளிகையின் உட்புறம் வெளிப்புறம் இரண்டையும் நன்ருய்ப் பார்க்கக்கூடியதாய் அவ்விடம் அவர்களுக்கு வாய்த்திருந்தது. அந்த ராக்ஷதன் விநோதமாய்ப் பொழுதுபோக்குவதெல்லாம் அந்த மேல்மாளிகையிலேதான். அவன் பலவகைத் தானியங்கள் சேகரித்துவைப்பதும், ஆடையாபரணங்கள் வைப்பதும் அம் மேல்மாளிகையிலேதான். அந்த மெத்தைமேல் இந்த ராஜகுமாரத்திகளிருவரும் ஒரு நெற்களஞ்சியத்தின்கீழ் ஒளித்துக் கொண்டிருந்தார்கள்.

ராக்ஷதன் வீட்டுக்கு வந்ததும் வீட்டை நாற்புறமும் சுற்றிப் பார்த்து: இம்மாளிகைமுழுதும் எவ்வளவு நன்ருய்ச் சீர்ப்படுத்தி வைத்திருக்கிறது பார்த்தையா! ஒரு குப்பைகூட இல்லாமல் தரைமுழுதும் பெருக்கி எடுத்திருக்கிருர்கள். இவ்விடத்திற்கு யாரோ வந்துதான் இவ்வளவுவேலை செய்திருக்கவேண்டும். அல்லது நீயே இவைகளையெல்லாம் இப்படிச் சீர்ப்படுத்திவைத்தாயா

என்றுகேட்க, அவன் மனவி: நான் ஒன்றும் அறியேன் என்ருள். அதைக்கேட்டு அந்த ராக்ஷதன் தன் மூக்கை மலர விரித்து வாசனை பிடித்துக்கொண்டு அந்த வீட்டைப் பலதரம் சுற்றிவந்து, இவ்விடத்தில் யாரோ வந்து தங்கியிருக்கவேண்டும். மனிதமாமிசமும் ரத்தமும் நாற்றமடிக்கிறது; எவன் எங்கேவந்து ஒளித்திருக்கிருன் என்று கூவ, அவன் மனையாள்: நீ என்ன சிறிதும் ஆலோசனையில்லாத பேச்சுபேசுகிருய்! நீ அறுபதுநாழிகையும் நூற்றுக்கணக்காய் மனிதர்களைக் கொன்று புசித்துக்கொண்டிருக்கிருய்! இன்னுங்கூட இதோ தின்றுகொண்டே இருக்கிருயே! அதன் மணம் என்றைக்காவது உன் மூக்குக்கு ஏன் எட்டாமலிருக்கும்? அதைவிட்டு என்னவோ பேசுகிருயே என்றுசொன்னுள். அவர்கள் இருவரும் இப்படிக் கொஞ்சநேரம் விவாதப்பட்டுக்கொண்டிருந்தார்கள். கடைசியில் ராக்ஷதன்: நீ என்னவோ சொல்லுகிருய், எனக்கு நரமாமிசநாற்றம் நன்ருய் வருகிறது அது எப்படியாவது கிடக்கட்டும், எனக்கு வெகு தாகமாயிருக்கிறது; கொஞ்சம் தண்ணீர்குடிப்போம் வா என, அவ்விருவரும் அண்டையிலிருந்த ஒரு கிணற்றண்டைபோய்த் தண்ணீர்மொண்டுகொண்டிருந்தார்கள்.

இப்படி உள்ளே நடந்த செய்திகளையெல்லாம் ராஜகுமாரத்திகளிருவரும் மெத்தைமேலிருந்து உற்றுப்பார்த்துக்கொண்டிருந்தார்கள். கடைசியில் அந்த ராக்ஷதன் தன் மனைவியோடுகூடக் கிணற்றங்கரையிலே போய் நிற்கக்கண்டு, அந்தப் பெண்களுள் மிகவும் சமர்த்தியான இளையவள் மூத்தவளைப்பார்த்து: இப்போது நான் நம் இருவருக்கும் நன்மையாய் ஒரு காரியம் செய்து வருகிறேனென்று சொல்லிவிட்டு, உடனே கீழிறங்கி ராக்ஷதர்களுக்குத் தெரியாமல் மெதுவாய் நகர்ந்துகொண்டு கிணற்றண்டை அவர்கள் காலின்கீழேபோய், அவர்கள் காலை நொண்டி விரல்களைமாத்திரம் ஊன்றி நின்றுகொண்டிருக்கிறதருணம்பார்த்துத் திடீரென்று இருவர் காலையும் பிடித்துத் தூக்கி அவர்களைக் கிணற்றிலே தள்ளிவிட்டாள். ராக்ஷதர்கள் இருவரும் கிணற்றிலே வீழ்ந்து உடனே மூழ்கி இறந்துபோனுர்கள். அந்தப் பெண் தன் காரியத்தை முடித்துக்கொண்டு தன் அக்காளண்டை போய், நான் ராக்ஷதர்களைக் கொன்றுபோட்டேனென்று சொல்ல, அவள்: இருவரையும் கொன்றுபோட்டாயா என்று கேட்டதற்கு: ஆம், இருவரையுந்தான் கொன்றுபோட்டேன்; இனி அவர்கள் ஒருநாளும் பிழைத்துவரமாட்டார்கள் என்றுசொல்லிச் சந்தோஷமடைந்தாள்.

ராக்ஷதர்கள் இறந்துபோனபிறகு அந்த ராஜகுமாரத்திகள் இருவரும் அந்த மாளிகையைத் தாங்களே சுயாதீனப்படுத்திக்கொண்டு அதில் வெகு சவுக்கியமாக நெடுநாள் வாழ்ந்துகொண்டிருந்தார்கள். அந்த ராக்ஷதன் அங்கங்கிருந்து கொண்டுவந்து சேகரித்து வைத்த அளவற்ற சிறந்த ஆடையாபரணங்களும், பொன் வெள்ளி

சாமான்களும், இன்னும் பலவிதமான பொருள்களும் அம்மாளி கையில் விசேஷமாய்க் காணப்பட்டன. அம்மாளிகையைச் சுற்றி லும் ஆடுகளும் மாடுகளும் நிறைந்திருந்தன. அப்பெண்களுள் இளை யவள் நாள்தோறும் ஆடுமாடுகளைக் காலையில் வெளியே ஓட்டிக் கொண்டுபோய் மேய்த்துக்கொண்டு மாலைவேளையில் வீட்டிற்குத் திரும்பிவருவாள். மூத்தவள் வீட்டிலேயேயிருந்து சோறுசமைப் பது முதலான வீட்டுவேலை செய்துகொண்டு வீட்டைப் பத்திரமா ய்க் காத்துக்கொண்டிருப்பாள். அவ்விரண்டு பெண்களுள் இளைய வள் மிக்க யுக்தியும் விவேகமும் முன்ஜாக்கிரதையும் உடையவ ளாதலால், நாள்தோறும் தான் வீட்டைவிட்டு வெளியே போ கும்போது: நீ மிகவும் பத்திரமாய்க் காத்துக்கொண்டிரு, புதிதாய் யாராவது இவ்விடத்திற்கு வருவார்கள். ஆணுகட்டும் பெண் ணுகட்டும் யார் வந்தாலும் அவர்கள் கண்ணுக்கு அகப்படாமல் ஒளித்துக்கொள். யாராவது பரதேசியாய் வந்து சோறு தண்ணீர் இரப்பார்களானல், கந்தைத்துணியும் கரிபூசின மேனியுமாய் நம் மால் எவ்வளவு செய்யக்கூடுமோ அவ்வளவும் உடலை விகாரப் படுத்திக்கொண்டு அவர்கள் எதிரேபோய் நில்; இல்லாவிட்டால் உன் அழகைப்பார்த்து உன்னைப் பிடித்து இழுத்துக்கொண்டு போய்விடுவார்கள். போய்விட்டால் பின்பு நாம் இருவரும் ஒரு போதும் கூடமாட்டோம் என்று எச்சரிக்கை சொல்லிவிட்டுப்போ வாள். மூத்தவளும் அப்படியே ஆகட்டுமென்று சொல்லி மிகவும் ஜாக்கிரதையுடன் வீட்டிலே காத்துக்கொண்டிருப்பாள். இப்படி யாகச் சிறிதுகாலம் சென்றது.

நெடுநாள்வரையில் அவ்விடத்திற்கு ஒருவரும் வரவில்லை. அந்தப் பெண்களுக்கு எந்தவிதமான துன்பமுமுண்டாகவில்லை. இப்படியிருக்க, அண்டைநாட்டு ராஜகுமாரன் ஒருவன் வெகு நாளாய் அந்தக் காட்டுக்குவந்து வேட்டையாடிக்கொண்டிருந் தான். வேட்டையாடிக்கொண்டிருக்கையில் ஒருநாள் நெடுநே ரம் வேட்டையாடித் தவித்துத் தண்ணீர் அகப்படாமல் எங்கே அகப்படுமோவென்று தேடிக்கொண்டு இந்தப் பெண்கள் குடியி ருந்த அரண்மனையண்டைவந்து சேர்ந்தான். நிர்மானுஷியமான நடுக்காட்டிலே மிகவும் அற்புதமான மாளிகையொன்றிருப்பதைக் கண்டு, அந்த ராஜகுமாரன் இதென்னவென்று ஆச்சரியமடைந்து தன் பரிஜனங்களைப்பார்த்து: நீங்கள் இந்த அதிசயத்தைக் கண் டீர்களா? இந்தப் பெருங்காட்டின் நடுவே இப்படிப்பட்ட அழகான அரண்மனை யார் கட்டியிருப்பாகள்! நல்லது, அங்கேபோய்க் கொஞ்சம் தண்ணீர் வாங்கிக்கொண்டுவருவோமென, சேவகர் கள்: வேண்டாம், வேண்டாம், நாம் அவ்விடத்திற்குப் போகக் கூடாது. இந்தப் பெருங்காட்டிலிருக்கிற வீடு ஒரு ராக்ஷதனு டையதாயிருக்குமே ஒழிய மற்றெவனுடையதாயுமிராது என்று

சொல்லி மறுக்க, ராஜகுமாரன்: எல்லாவற்றிற்கும் நாம் நேரா ய்ப்போய்ப் பார்ப்போம்; பயங்கரமான பிராணியொன்றும் இதில் வசிப்பதாய் எனக்குத் தோன்றவில்லை; அப்படியிருந்தால் இரைச்சலும் ஆரவாரமுமாயிராதா? இப்படி கம்மென்று அடங்கியிருக்குமா என்று சொல்லிவிட்டு அம்மாளிகைக்குச் சென்றான். அங்கே வாயில் கதவுசாத்தித் தாழ்ப்பாள்போட்டிருந்தது. ராஜகுமாரன் கதவண்டைபோய் நின்று: இந்த வீட்டுக்கு உடையவர் யாரையா? நாங்கள் நாவறண்டு வந்திருக்கிறோம், இந்த வேளையில் கொஞ்சம் தண்ணீர்கொடுத்துக் காப்பாற்றுங்கள் என்று கூவினான். அவன் என்ன கூவியும் ஒருவரும் ஏனென்று விடைகொடுக்கவில்லை. அந்த மாளிகைக்குள்ளிருந்த ராஜகுமாரத்தி அவன் குரலைக் கேட்டவுடனே தன் தேகத்தை விகாரப்படுத்திக்கொள்வதற்காக கரியரைத்துப் பூசுவதும், கந்தைகளை எடுத்துக் கட்டிக்கொள்வதுமாயிருந்தாள். அந்தத் தாமதத்தைத் தாளமாட்டாமல் ராஜகுமாரன் மிக்க கோபத்துடன் கதவைப் பிளப்பதுபோலப் பலதரம் இடித்து: யாருள்ளே? கதவைத் திறப்பீர்களா, மாட்டீர்களா? திறக்காவிட்டால் நானே கதவைப் பிளந்துகொண்டு உள்ளே வந்துவிடுவேன் என்று கூவ, அதைக்கேட்டு உள்ளே இருந்த பெண் மிகவும் வெருண்டு சீக்கிரமாய்த் தன் உடலை விகாரப்படுத்திக்கொண்டு, ஒரு பாத்திரத்தில் கொஞ்சம் தண்ணீரோடு கூடவந்து கதவைத்திறந்தாள். ஆயினும் அவன் யாரோ என்னவோ என்கிற பயத்தினால் அவள் ஒரு பேச்சுக்கூடப் பேசவில்லை. அந்த ராஜகுமாரன் மிகுந்த சாமர்த்தியமுடையவனாதலால், அவன் தண்ணீர்குடிக்கத் தலையை நிமிர்த்தும்போது அந்தப் பெண்ணைப்பார்த்து: இதென்ன, இந்தப் பெண்வடிவம் இப்படியிருக்கிறதே; இவளைப் பார்க்கையில் அதிக ரூபவதியாயிருக்கவேண்டுமென்று தோன்றுகிறது. வேண்டுமென்று ஏதோ ஒன்றை உடம்பெல்லாம் பூசிக்கொண்டு இவ்வளவு விகாரமாய்த் தென்படுகிறாள். இந்த அதிசயத்தைக் கண்டறியவேண்டுமென்று தன் கையிலிருந்த தண்ணீரைக் குடிக்காமல் அந்தப் பெண் முகத்தில் இறைத்தான். இறைக்கவே அவள் ஒருவாறு கதறிக்கொண்டு கொஞ்சம் பின்னிடைந்தாள். அவள் முகத்தில் இறைத்த நீர் அங்கிருந்த கரியை நன்றாய்க் கழுவிக்கொண்டு கீழே வழிய, அந்த முகமானது கிரகணத்தினின்றும் விடுபட்ட சந்திரபிம்பம்போல வெகு நன்றாய்ப் பிரகாசித்தது. அந்த முகத்தின் சவுந்தரியத்தைக்கண்டு ராஜகுமாரன் பிரமித்து: அவ்வழகியின் செந்தாமரை மலர்க்கைகள் இரண்டையும் பிடித்துக்கொண்டு: என்னுசைக் கிளியே! நீ யார்? எங்கிருந்துவந்தாய்? உன் தாய்தந்தையர்கள் எங்கே? இந்த நடுக்காட்டில் நீமாத்திரம் இப்படித் தனித்து வசிப்பதற்குக் காரணமென்ன? எல்லாம் உள்ளது உள்ளபடியே சொல்,

இல்லாவிட்டால் உன் தலையை வெட்டிப்போடுவேனென்று சொல்லிக் கத்தியை உருவுவதுபோல நடிக்க, அவள் அதுகண்டு மிகவும் பயந்து கொஞ்சநேரம் வாயெடுத்துப்பேசாமல் நின்றாள். ஆயினும் அவன் எங்கே கொன்றுபோடுகிறானோவென்கிற திகிலினால் மனதைக் கொஞ்சம் தைரியப்படுத்திக்கொண்டு, தான் ஒரு ராஜகுமாரத்தியென்றும், தன் மாற்றாந்தாயினுடைய கொடுமையைப் பொறுக்கமாட்டாமல் காட்டுக்கோடிவந்து அந்த மாளிகையில் தனித்து வசித்துக்கொண்டிருப்பதாகவும் தன் கதையைச் சொல்லி, அதைச் சொல்லிமுடித்ததும் முடியாததுமாய் தீனமாகப் புலம்பத்தொடங்கினாள். அவளுடைய பரிதாபத்தைப்பார்த்து ராஜகுமாரன் இரக்கமுற்று: என் காதற்கொழுந்தே! இப்போது நான் உன்னிடத்தில் காட்டிய கொடுமைக்காக நீ என்னை மன்னிக்கவேண்டும்; நீ பயப்படாதே, நான் உன்னை என் பட்டணத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் நானே உன்னைக் கலியாணஞ்செய்துகொள்ளுகிறேன் என்றான். அவன் சொல்லுகிற வார்த்தைகளைக் கேட்கக்கேட்க அவளுக்கு மனதில் அச்சமும் திகிலும் அதிகமாகிக்கொண்டேவந்தது. கடைசியாய் அவள், அவன் சொல்லுவது இன்னதென்றுகூடத் தெரியாமல் மூர்ச்சைபோயினாள். இவ்வளவு நேரத்திலும் அந்தப் பெண் தன் சகோதரியைப்பற்றி யாதொன்றும் சொல்லவில்லை. தனக்குச் சகோதரி ஒருத்தியிருக்கிறாளென்றுகூட அவனுடன் சொல்லவில்லை. ஏனெனில் இவன் நம்மையே கொன்றுவிடுவதாய்ச் சொல்லுகிறானே, அவள் செய்தியைச் சொன்னால் அவளையும் பிடித்துக் கொன்றுபோடுவான் என்று பயந்து, ஐயோ பாபம்! அவளாவது எங்கேயாயினும் தப்பிப் பிழைக்கட்டும் என்று நினைத்துச் சும்மாயிருந்துவிட்டாள். அந்த ராஜகுமாரன் பூததயை பச்சாத்தாபம் முதலிய நற்குணங்கள் நிறைந்தவன்; பிறந்தநாள்முதல் ஒருவரையொருவர் விட்டுப் பிரியாத இந்தப் பெண்களைப் பிரிக்கவேண்டுமென்று அவன் ஒருபோதும் எண்ணமாட்டான். ஐயோ! இந்தச் செய்தியொன்றும் அவனுக்குத் தெரியாதே. ஒருநாளும் புது மனிதனைக் கண்ணாலே பாராதவளாதலால் நாம் நல்லவார்த்தை சொன்னாலுங்கூட அதைக்கேட்டு இவள் நடுங்குகிறாளென்று நினைத்துத் தன் சேவகர்களை அழைத்து, இந்தப் பெண்ணை எடுத்துப் பல்லக்கில் வைத்துக்கொள்ளுங்கள்; நாம் நமது பட்டணத்திற்குப் போவோமென்றான். ராஜகுமாரனுடைய கட்டளைப்படியே சேவகர்களும் அந்தப் பெண்ணைப் பல்லக்கில் ஏற்றிக்கொண்டார்கள்.

இப்படித் தன்னைப் பல்லக்கில் போட்டடைத்துத் தூக்கிக்கொண்டுபோம்போது, அந்தப் பெண் கொஞ்சம் நினைவுவந்து கண்திறந்துபார்த்தாள். பார்த்து, ஐயோ! இதென்ன? நம்மை எங்கேயோ தூக்கிக்கொண்டுபோகிறார்களே! பொழுதுபோன

வுடன் காட்டுக்குப்போன பெண் திரும்பி வீட்டுக்குவந்து பார்த்தால் என்ன நினைப்பாளோ! என்ன சங்கடப்படுவாளோ! என்ன புலம்புவாளோ! என்று விசனமடைந்து, நாம் போனவழியாவது அவளுக்குத் தெரியும்படி ஏதாவது ஒரு குறிபோட்டுக்கொண்டு போகவேண்டுமென்று தீர்மானித்து, தான் கழுத்தில் தரித்துக்கொண்டிருந்த முத்துமாலைகளிலிருந்த முத்துக்களையுருவித் தன் பட்டாடையொன்றைத் துண்டுதுண்டாய்க் கிழித்துக் காற்றிலே பறந்துபோகாமல் கொஞ்சம் பளுவாயிருக்கும்படி ஒவ்வொரு பட்டுத்துண்டிலும் ஒவ்வொரு முத்தை முடிந்து கொஞ்சந்தூரத்துக்கு ஒவ்வொன்றாக அந்த ராஜகுமாரனுடைய அரண்மனை போமளவும் வழிமுழுதும் போட்டுக்கொண்டுபோய்க் கடைசியில் மிகுந்ததை அந்த அரண்மனை வாயிலண்டை போட்டுவைத்தாள்.

அத்தேசத்து ராஜாவும் ராணியும் தம்மகன் இட்டுக்கொண்டு வந்த பெண்மணியின் சவுந்தரியத்தைக்கண்டு மிகவும் களிப்படைந்தார்கள். மேலும் ஆதிதொடங்கி அவளுடைய சரித்திரத்தைக் கேட்டு மிகவும் பரிதாபப்பட்டு, இனி இவளுக்குத் தம்மால் கூடியவரையில் நன்மை விளைவிக்கவேண்டுமென்று தீர்மானித்து, தம்மகனுக்கே அந்தப் பெண்ணைக் கலியாணஞ்செய்து கொள்ள நிச்சயித்தார்கள். அந்தப்படியே ஒருநாள் நல்ல சுப முகூர்த்தத்தில் அவ்விருவருக்கும் அனைவருங்கண்டு அதிசயிக்கும்படி மிக்க வைபவத்துடனே கலியாணம் நடந்தேறிற்று. அவ்வரசனும் அரசியும் அம்மருமகளுக்கு இதுவரையில் அவள் பட்ட துக்கங்களெல்லாம் மறந்து மேன்மேலும் களிப்பும் சந்தோஷமும் உண்டாகவேண்டுமென்று தம்மாலியன்றமட்டும் அவளுக்குச் சிறந்த ஆடையாபரணங்களெல்லாம் கொடுத்து, பின்பு ஒரு குறையும் உண்டாகாதபடிப் பலவித உபசாரங்களும் செய்வித்துவந்தார்கள். என்னசெய்தாலும் அந்தப் பெண்ணுக்குச் சிறிதும் சந்தோஷமுண்டாகவில்லை. தன் தங்கை தனியேநின்று என்ன வருத்தப்படுகிறளோ! எவ்விதமாயிருக்கிறளோ என்கிற துக்கம் அவள் மனதைவிட்டு நீங்கவேயில்லை. இச்செய்தியைத் தன் புருஷனுக்குத் தெரிவித்து அவளைத் தேடி அழைத்துவரச்சொல்வோமென்பதற்கும் அவளுக்கு மனதில் துணிவு உண்டாகவில்லை. இப்படியே கொஞ்சக்காலம் துக்கப்பட்டுக்கொண்டேகழித்தாள்.

இதிப்படியிருக்க ஆடுமாடுகளை மேய்த்துவரக் காட்டுக்குப்போயிருந்த இளையமகள் பொழுதுபோனதும் அவைகளை ஓட்டிக்கொண்டு வீட்டுக்குத் திரும்பிவந்தாள். வந்து பார்க்கையில் வாயிற்கதவு திறந்தது திறந்தபடியே இருந்தது. வாயிலண்டை ஒருவரும் நின்றுகொண்டிருக்கக் காணப்படவில்லை. நாள்தோறும்

இவள் மாலைவேளையில் மாடோட்டிக்கொண்டு வீட்டுக்கு வருகையில் உடன்பிறந்தாள் வாயிலண்டை வந்துநின்று இவள் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருப்பாள். இன்றைய்தினம் அவளையும் காணுமல் கதவும் திறந்தது திறந்தபடியே கிடக்கவே, அச்சிறுமி இதென்னவென்று திடுக்கிட்டு வீடுமுழுதும் சுற்றிச்சுற்றிப் பலதரம் தேடிப்பார்த்தாள். ஒருவரும் காணப்படவில்லை. வெளியே போய் எங்கேயாவது தேடிப்பார்ப்போம் என்பதற்குமில்லை. பொழுது போய்விட்டது. அப்போது அவள் மனந்தவித்த தவிப்பை என்னென்று சொல்லலாம்! அடி என் தாயே! கண்ணே! என் உயிரே! நீ எங்கே போய்விட்டாய்; நான் இதோ வந்து உன்னைக் காணுமல் தவிக்கிறேனே; யாராவது வந்து உன்னைப் பலவந்தமாய்ப் பிடித்து இழுத்துக்கொண்டுபோய்விட்டார்களா என்றிப்படிப் பலவிதமாய் இரவுமுழுதும் புலம்பிக்கொண்டிருந்தாள். அந்த ஒரு இராப்பொழுது கொஞ்சத்தில் ஒழியாமல் அவளுக்கு ஒரு யுகமாயிருந்தது. எப்போது கிழக்கு வெளுக்கப்போகிறதென்று காத்துக்கொண்டிருந்தாள்.

மறுநாள் பொழுதுவிடிந்ததும் அவள் தன் தமக்கையைத்தேடப் புறப்பட்டாள். அம்மாளிகையைச்சுற்றி நாற்புறமும் தேடுகையில் ஒரு புறத்தில் ஓரண்டை மூத்தவள் முடிந்து போட்டுப்போன முடியொன்று அகப்பட்டது. அதை எடுத்துப்பார்த்து அதனுள் இருந்த முத்து தன் தமக்கை தரித்துக்கொண்டிருந்த முத்துமாலையின் முத்தென்றும் அதை முடிந்திருந்த பட்டு அவள் அணிந்திருந்த பட்டாடையின் துண்டென்றும் தெரிந்துகொண்டு அந்த வழியே சிறிதுதூரம்போயினள். அங்கே மற்றொருமுடி அகப்பட்டது. இன்னும் சிறிதுதூரத்திற்கப்பால் இன்னொன்று அகப்பட்டது. இப்படியே ஐந்தாறுமுடிகள் அகப்படவே, தான்போனவழி நமக்குத் தெரியவேண்டுமென்று நம் அக்காள்தான் இப்படிப் போட்டுக்கொண்டுபோயிருக்கிருளென்று தெரிந்து சிறிது சந்தோஷமடைந்து அதேவழியாய்ச் சென்றுள். அதிகமாய் நடந்து வழக்கப்படாதவளாதலால் வழி கொஞ்சத்தில் மாளவில்லை. தன்னுலியன்றமட்டும் மெல்லமெல்ல வெகுநாள் வெகுதூரம் நடந்து மிகவும் ஓய்ந்துபோனுள். அதனுல் ஒவ்வோரிடத்தில் ஒரு முடியிலிருந்து மற்றொரு முடியண்டைபோக இரண்டுமூன்றுநாள்கூடச் சென்றது. உடம்பு ஓய்ந்துபோயும் உடன்பிறந்தாளைக் காணவேண்டுமென்னும் ஆவல் அதிகமாகவே வருத்தத்தோடு வருத்தமாய் மெல்லமெல்ல நடந்து ஒரு பெரிய பட்டணத்தண்டைபோய்ச்சேர்ந்தாள். அங்கே போகையில் தன் உடன்பிறந்தாள் இந்தப் பட்டணத்திற்கே கொண்டு வரப்பட்டிருக்கிருளென்று அவளுக்கு நன்ருய்த் தெரிந்தது. அந்தச் சிறுமகள் மகா சவுந்தரியமுடையவள். அவள் புத்தியின் தன்மைக்கேற்றதாகவே வடிவழகும் மேன்மைபெற்றிருந்தது. அங்ஙகாத்தண்

டைபோகையில் அவள், இப்பட்டணத்து ஜனங்கள் நம் அழகைக் கண்டால் நம் உடன்பிறந்தாளைச் செய்ததுபோலவே நம்மையும் பிடித்துக்கொள்வார்கள். பின்பு நாம் அவளைக் காண்போமென்கிற ஆசை ஒருபோதும் இல்லை. ஆதலின் நம்முடைய வடிவழகை மறைத்துக் கொண்டுதான் இந்நகரத்துள் நுழையவேண்டும் என்று நினைத்தாள். நினைக்கையில், வழியோரத்தில் வறுமையால் வற்றியுலர்ந்த கிழப்பிணமொன்று தென்பட்டது. அவ்வுடலில் எலும்பும் தோலுந்தவிர மற்றொன்றுமில்லை. இம்மகள் அதைப்பார்த்ததும் நமக்காகவே சுவாமி இதை இங்கே கொண்டுவந்துபோட்டார் என்று சந்தோஷத்துடன் அவ்வுடலிலிருந்து தோலையுரித்து அதை நன்றாய்க்கழுவித் தன் செந்தாமரை முகமும் சங்கக்கழுத்தும் தங்கக்கொடிமேனியும் விகாரப்படும்படி அந்தத் தோலை மேலே போர்த்துக்கொண்டு, வழியேகிடந்த நீண்ட தடியொன்றையும் கையில் ஊன்றிக்கொண்டு ஒரு தள்ளாத கூனிக்கிழவிபோலத் தத்தித்தத்தி நடந்துபோனாள். அவள் போர்த்துக்கொண்ட கிழத்தோல் முழுதும் திரைத்துச் சிற்சிலவிடங்களில் அழுகியுமிருக்கவே பார்ப்போர்களெல்லாம் இப்படிகூட விகார வடிவமாய் உலகில் ஒரு கிழவியிருப்பாளோ என்று சொல்லி அவளைப் பரிகாசம்பண்ணிவிட்டுப்போனார்கள். அவளுடைய இயற்கையான வடிவம் இதல்லவென்றும் வேண்டுமென்று மேலுக்கு வேஷந்தரித்துக்கொண்டிருக்கிறாளென்றும் ஒருவர்க்குந் தோன்றவில்லை.

இப்படியே அப்பெண்ணரசி இங்குமங்கும் கிடந்த முத்து முடிகளைப் பொறுக்கிக்கொண்டு பட்டணத்துத்தெருவழியே போயினாள். அது கடைசியில் அவளுடைய தமக்கை வாழ்கின்ற மாளிகை வாயிலண்டை கொண்டுவிட்டது. அம்மாளிகைவாயிலில் மிகுந்த முத்துக்களெல்லாம் குப்பலாய்க் கொட்டிக்கிடக்கவே இதற்கருகிலேதான் எங்கேயாவது ஓரிடத்தில் மூத்தவள் வந்திருக்கவேண்டுமென்று அவளுக்கு நிச்சயமாய்த் தோன்றிற்று. அந்த ராஜமாளிகைக்குள் எப்படியாவது நுழைந்து தேடிப்பார்க்கவேண்டுமென்று அவள் மனம் தவித்துக்கொண்டிருந்தது. இப்படிப்பட்ட அவலக்ஷணமான கூனிக்கிழவியைக் காவலாளர்கள் என்றைக்காவது உள்ளே விடுவார்களா? தன் கையிலிருக்கிற முத்துகளில் இரண்டொன்றைப் பரிதானங்கொடுத்து உள்ளேபோவோமென்பதற்கும் அவளுக்குத் துணிவுண்டாகவில்லை. இவைகளைக் கொள்ளையடித்துக் கொண்டுவந்தாளென்று எங்கே பிடித்துக்கொள்வார்களோவென்று திகிலடைந்தாள். ஆதலால் அங்கேபோய் ஒருவரையும் கேட்கத் தைரியமுண்டாகாமல், அம்மாளிகைக்குச் சமீபத்தில் தனக்கேற்றதாய் வாய்க்கும் ஓரிடத்தில் தங்கியிருந்து, தன் சோதரியைப்பற்றிச் செம்மையாய் ஏதாவது ஒரு செய்தி தெரியும்படியான நல்லகாலம் நேரிடுமளவும் அங்கேயே காத்துக்கொண்டிருக்கவேண்டுமென்று

தீர்மானித்து அம்மாளிகைக்கு எதிரிலிருந்த ஒரு குடியானவன் வீட்டுத் தெருத்திண்ணையிலேபோய் உட்காந்து காத்துக்கொண் டிருந்தாள். அப்போது அவ்வீட்டுக்காரி வந்துபார்த்து, அம்மா பாட்டியாரே! நீர் யார்? ஏன் இவ்விடத்திற்கு வந்தீர்? உமக்கு என்ன தேவை? உமக்குச் சொந்தமனிதர் ஒருவரும் கிடையாதாவென்று கேட்க, அவள்: ஐயோ! ஒருவரும் கிடையாதே, நான் ஒரு பரதே சிப்பெண்; என்னை இந்தத் தள்ளாதவயதில் காப்பாற்றத் தாய்தந்தை யர்களுமில்லை, பிள்ளைபெண்களுமில்லை, உடன்பிறந்தவர்களும் இல்லை, மற்றெவருமில்லை, யாவரும் போய்விட்டார்கள், நான் வீடு வீடாய்ப்போய் இரந்தாலொழிய என் சாண்வயிற்றுக்கு ஒரு கவ ளத்திற்கு வழியில்லையென்றாள்.

அதைக்கேட்டு அவ்வீட்டுக்காரி, அவளிடத்தில் இரக்கமுற்று, தாயே! நீர் துக்கிக்கவேண்டாம், எனக்குக் கிடைத்த நிழலில் நீரும் சவுக்கியமாய்த் தங்கியிருக்கலாம். நாங்கள் புசிக்கிற போசனத்தில் நீரும் சிறிதளவு கிடைத்தவரையில் புசித்துக்கொண்டு இங்கேயே யிரும் என்று சொல்லி அவளைத் தேற்றினாள். அதைக்கேட்டு அந் தப் பெண் இதுவும் நமக்கொரு நல்லகாலந்தானென்று அவளிடுகிற சோற்றைத் தின்றுகொண்டு அவ்வீட்டிலேயே குடியாயிருந்தாள். அப்படியே கொஞ்சகாலமாயிற்று; ஆயினும் சகோதரியைப்பற்றிய செய்திமட்டும் அவ்வளவுகாலத்தில் அவளுக்கு யாதொன்றுந்தெரிய வில்லை.

அந்த ராஜமாளிகைக்கு அருகே மிகவும் அழகாய்ப் பெரிய தடாகமொன்று உண்டு. அதில் மிகவும் சிறப்பாய்ச் செந்தாமரை படர்ந்திருந்தது. அதில் அரசர்க்கே உரியதாய் மிகவும் அற்புதமான செந்தாமரைமலர்கள் நாள்தோறும் மலர்வதுண்டு. அப்பட்டணத்து அரசன் அவற்றில் மிகவும் விருப்பங்கொண்டவனாய் அவைகளைத் தன் கண்கள்போலக் காத்துவந்தான். அந்தத் தடாகம் அச்சிறுமகள் தங்கியிருந்த குடியானவன் வீட்டுக்கு அடுத்திருந்ததனால், அப் பெண் நாள்தோறும் காலையில் விடியயாமவேளைக்கு எழுந்து அந் தத் தடாகத்திற்குப் போய்த் தான் மேலே தரித்திருக்கும் தோலைக் கழற்றித் தோய்த்து ஒரு மரத்தில் உலர்த்திவிட்டுத் தன் அழகான மேனியை நன்றாய்த்தேய்த்து ஸ்நானம்பண்ணி, நீர்கொண்ட மே கம்போலக் கறுத்துக் குதிகாலிற்புரளும் கூந்தலை நன்றாய்க் கோதி, தான் சிறுவயதுதொடங்கி வழக்கப்பட்டிருக்கிறபடியே, அத்தடா கத்திலுள்ள செந்தாமரைமலர்களுள் சிலவற்றைப் பறித்துத் தலை யில் அணிந்துகொண்டு, உலர்த்தியதோல் நன்றாய்க் காற்றாடி உலரு மளவும் தன் இயற்கைவடிவத்தோடேயே இருந்து களிப்படை வாள். அந்தத் தோல் உலர்ந்ததும் தான் தரித்துக்கொண்ட பூக்களை அவிழ்த்துப்போட்டுவிட்டுத் தோலைப்போர்த்துக்கொண்டு சூரிய

ஞொளி தோன்றுவதற்குமுன்னமே அந்தக் குடியானவன் வீடுவந்து சேருவாள். இப்படியே சிலநாள் நடந்துவந்தது.

அப்படியிருக்க ஒருநாள் அரசன் தடாகத்தை வழக்கப்படி வந்து பார்க்க, முன்போலிராமல் அதில் மலர்கள் குறைந்திருக்கவே யாரோ இரவில் வந்து மலர்களைத் திருடிக்கொண்டுபோகிறார்களென்று தெரிந்து அந்தத் திருடனைக் கண்டுபிடிக்கும்படிக் காவல்வைத்தான். இரண்டொருநாள் ஒருசெய்தியுந் தெரியாமற் போகவே, அப்பட்டணத்தில் வல்லவரென்று பேர்பெற்றவர்கள் அனைவரும் இதென்ன அதிசயமென்று அந்தத் திருடனைக் கண்டு பிடிக்க ஒருதலையாய் முயன்றார்கள். ஒருவராலும் ஆகவில்லை. பலபேர்கள் ஏமாந்துபோகவே எவ்விதத்திலாவது இந்தக் கள்ளனைக் கண்டுபிடிக்கவேண்டுமென்று ஆவல் அதிகமாயிற்று. கடைசியாய் அவ்வரசனுடைய மிக்க தைரியமும் துணிவுமுடையவனான இளையமகன், அதாவது இந்தச் சிறுமகளின் தமக்கையைக் கலியாணஞ்செய்துகொண்டவனுக்கிளையவன், இந்தத் திருடனை நான் எப்படியாவது கண்டுபிடித்துக்கொடுக்கிறேன் என்று சபதஞ்செய்தான். அந்தத் தடாகத்தைச் சுற்றி அதன் கரையில் அநேக மரங்கள் அழகாய் முளைத்திருந்தன. ஒருநாள் மாலைவேளையிலேயே வந்து அந்த இளைய ராஜகுமாரன் அவற்றுள் ஒரு மரத்திலேறிக்கொண்டு எப்போது எவன் வருவானோவென்று மலர்ந்தகண் மூடாமலே நெடுநேரம் விழித்துக்கொண்டிருந்தான். ஒருவரும் வரவில்லை. தாமரைமலர்களெல்லாம் தடாகத்தில் அசைவற்றிருந்தன. காற்றுகூட உரத்து வீசி அவைகளை ஒடிக்க முயலவில்லை. ராஜகுமாரனுக்கோ தூக்கத்தால் கண்கள் உறங்கி வீழ்ந்தன. அப்படியிருந்தும் அவன், பொழுது விடியுமளவும் இருந்து இந்த அதிசயத்தைப் பார்க்கவேண்டுமென்று தூக்கக் கண்ணை நன்றாய்த் துடைத்துக்கொண்டு ஒரேநிலையாய்க் காத்துக் கொண்டிருந்தான். இப்படியிருக்க விடியும்வேளையாயிற்று. அத்தருணத்தில் கிழவிவேஷம்பூண்ட இந்த ராஜகுமாரத்தியல்லாமல் மற்றெவள் அங்கே வரப்போகிறாள்! வழக்கப்படியே அந்தச் சிறுபெண் அந்தத் தடாகத்திற்கு வந்தாள். அவளைப்பார்த்து ராஜகுமாரன்: ஆ! இவள்தானோ தினந்தோறும் வருகிற திருடன்; இந்த விகாரவடிவமுள்ள கிழவிக்குத் தாமரைப் பூவாலாகவேண்டுவதென்ன என்றெண்ணி, என்னநடக்கிறதோ பார்ப்போமென்றிருந்தான். அவ்வழகி குளக்கரையில் வந்து மேலே போர்த்திருந்த கிழப்போர்வையைக் கழற்றும்போது அவனுக்கு உண்டான அதிசயத்தை என்னென்று சொல்லலாம். அவள் மேற்போர்வையைக்கழற்றவே மின்னற்கொடிபோலிராநின்ற அவளுடைய இயற்கையான வடிவழகைக்கண்டு பிரமித்து, இவ்வளவு அழகும் மேனியும் இளமையுமுடையவளாகக்கூட ஒரு பெண் உலகிலுண்டோ? இவளென்ன

சாதாரணமான பெண்தானா? அல்லது தெய்வப்பெண்ணோ? அல்லது பூதம்பிசாசம் ஏதாவதொன்று இவ்விதமாக வேஷந்தரித்துக் கொண்டுவந்ததோ என்றிப்படிப் பலவாறு நினைத்தான்.

அக்குளத்திற்கு நீராடவந்த அவ்விளவரசியும் வழக்கப்படியே குளத்திலிறங்கித் தன் மேற்போர்வையை வாங்கித் தோய்த்து உலர்த்திவிட்டு நன்றாய் நீராடிப் பின்பு தன் கூந்தலைக் கோதித் தாமரைமலர்களை முடித்துக்கொண்டு நல்ல ஆடையாபரணங்களும் அணிந்து சிறிதுநேரம் விநோதமாயிருந்து விடியநேரமானதும், நீர்கொண்ட மேகத்தினின்றும் மின்னலை வீழ்த்துவதுபோல, தன் கூந்தலிலிருந்த தாமரைமலர்களைக் களைந்தெறிந்து கிழப்போர்வையைப் போர்த்துக்கொண்டு வேகமாய் வீட்டுக்குச்சென்றாள். இவற்றையெல்லாம் ஒளித்துப்பார்த்திருந்த ராஜகுமாரன் உடனே தான் வீட்டுக்குப்போனதும் போகாததுமாய்த் தாய்தந்தையர்களைக் கண்டு, நம் எதிர்வீட்டு வாயிலில் உட்கார்ந்திருக்கின்ற கிழவியை நான் கலியாணஞ்செய்துகொள்ள வேண்டுமென்றான். அதைக்கேட்டு அவர்கள், உனக்கென்ன பித்தம்பிடித்ததோ! உடம்பெல்லாம் நரையுந்திரையுமாய் இன்றோ நாளையோ சாவக்கிடக்கிற கிழவியைக் கலியாணஞ்செய்துகொள்கிறதா? ஒரு பிச்சைக்காரக் கிழவியைப்போய்க் கலியாணஞ்செய்துகொள்ள விரும்பும்படியாய் உன்னைப்போன்ற ராஜகுமாரர்களுக்குச் சிறந்த பெண்களில்லாமல் உலகம் பாழ்த்துப்போயிற்றா? வேண்டுமென்றால் ராஜகன்னிகைகள் அநேகர் காத்திருக்கிறார்களே என்ன, அந்தக் குமாரன்: நீங்கள் என்னதான் சொல்லுங்கள்; நான் இந்தப் பெண்பிள்ளையையே விவாகஞ்செய்துகொள்வேன், இதுவரையில் நீங்கள் சொன்னதற்கு நான் என்றைக்காவது குறுக்கு சொன்னதுண்டா? இந்த ஒன்றுமட்டும் நீங்கள் மனமொப்பி என் இஷ்டப்படியே நடப்பிக்கவேண்டுமென்று வேண்டினான். அதுகேட்டு அவர்கள் மிக்க வெறுப்பும் விசனமும் அடைந்தார்கள். ஆயினும் அவன் மனதைத் திருப்பக்கூடாமையால், விதியில்லையென்று அவன் சொன்னபடியே ஏற்றுக்கொண்டு கிழவிவேஷம் பூண்டிருக்கும் அவ்விளவரசியை அழைப்பித்து, இந்த மணமகளைப்பார்த்தால் அனைவரும் நகைப்பார்களென்று எண்ணி, விசேஷ ஆடம்பரம் ஒன்றுமில்லாமல் மிகவும் ரகசியமாய் அவ்விருவருக்கும் கலியாணம் நடத்திவிட்டார்கள்.

கலியாணமானதும் ராஜகுமாரன் தன் மனையாளண்டைபோய் என் பிராணநாயகி! நீ இந்தக் கிழத்தோலை இன்னும் எத்தனைநாளைக்குத் தரித்துக்கொண்டிருக்கக் கருதியிருக்கிறாய்? இப்பொழுதே களைந்துவிடும்படி நான் உன்னை வேண்டிக்கொள்கிறேன் என்றான். அதைக்கேட்டு அந்தப்பெண்: நாம் மாறுவேஷம் பூண்

டிருப்பது இவருக்கு எப்படித் தெரிந்தது; இல்லாவிட்டால் நம் கருத்தை அறியவேண்டுமென்று நம்மைப் பரீக்ஷிப்பதற்காகவே இப்படிப் பேசுகிறுரா என்று ஆச்சரியமும் சந்தேகமும் அடைந் தாள். ஆயினும், நாம் இந்தப் போர்வையை வாங்கி நம் இயற்கை வடிவத்தைக் காட்டினுல், நம் அழகைக்கண்டு வெளியே போகவொட்டாமல் நம்மை அந்தப்புரத்தில் அடைத்துப்போடுவார்; பின்பு நம் சோதரியைத் தேடுகிற ஆசையேயில்லை; ஆதலால் இதைப் பிராணன்போனுலும் கழற்றக்கூடாதென்று தீர்மானித்து, நீர் சொல்லுகிற கருத்து என்னவோ எனக்கு ஒன்றும் அகப்படவில்லையே? என் வயதுக்குத்தக்க வேஷத்தோடுதான் நான் இருக்கிறேன்; மேல் தோலை மாற்றிக்கொள்கிறவர்கள்கூட உலகத்திலுண்டோ என, ராஜகுமாரன் மிக்ககோபங்கொண்டவன்போலக் காட்டி, நீ மேலே போர்த்துக்கொண்டிருக்கிற பொய்த்தோலை வாங்கிப்போடுகிறுயா? அல்லது நான் ஒரேவெட்டாய் உன்னை வெட்டிப்போடட்டுமா என்று அதட்டவும் அவள் சலியாமல் தலைவணங்கிக்கொண்டு, தங்கள் இஷ்டப்படியே நடத்துங்கள் ஐயா; மேல்தோலை மாற்றமட்டும் ஒருவராலுமாகாது என்று தான் பற்களெல்லாம் வீழ்ந்து மிக்க வயதுசென்ற கிழவிபோல் வழவழத்துப்பேசினுள். அதைக்கண்டு ராஜகுமாரன் நகைத்து, நல்லது, இன்னும் எத்தனைநாளைக்குத் தான் இப்படியிருக்குமோ பார்ப்போமென்று சமயம்பார்த்துக் கொண்டிருந்தான். அந்த ராஜகுமாரத்தியும் தன் வேஷத்தை வாங்காமலேயிருந்தாள். ஆயினும் அவள் நாள்தோறும் முன் வழக்கப்படியே விடிய யாமவேளைக்கு எழுந்து நீராடிக்கொண்டிருந் தாள். தருணம்பார்த்துக்கொண்டிருந்த ராஜகுமாரனும் இச்செய்தியைத் தெரிந்துகொண்டு ஒருநாள் அவள் பின்மாலைவேளையில் எழுந்துபோம்போது தானும் அவளுக்குத் தெரியாமல் பின்தொடர்ந்து போய், அவள் மேற்போர்வையை உலர்த்திவிட்டு நீராடுகிற தருணம்பார்த்து அதைத் திருடிக்கொண்டுவந்து தீயில்போட்டு எரித்துவிட்டு ஒன்றும் அறியாதவன்போலிருந்தான். நீராடிவிட்டு வந்துபார்க்கையில் தன் வேஷத்தோலைக் காணுமற்போகவே அந்தப்பெண் மிகவும் விசனமடைந்து வேறு விதியில்லாமல் தன் மெய்யான உருவத்தோடே கணவனெதிரே வந்துநின்றுள். அவளைப் பார்த்து ராஜகுமாரன்: ஒகோ! இன்றைக்கு என்ன விசேஷம்? உன் தோல் இப்போது எங்கேபோயிற்று? அது மாற்றக்கூடாததல்லவா என்று சற்றுநேரம் பரிகாசமாய்ப்பேசினுன். இதற்குள் இந்தச் செய்தி அம்மாளிகைமுழுதும் பரந்துபோயிற்று. அதைக் கேட்டவுடனே அனைவரும் அவ்வதிசயத்தைப்பார்க்க ஓடிவந்தார்கள். அந்தப் பெண்ணைவந்து பார்த்தவர்களெல்லாம் அவள் அழகைக்கண்டு அதிசயித்து, நம் மூத்த ராஜகுமாரனுக்குக் காட்டிற் கிடைத்த மகளும் இம்மகளும் ஒரே அச்சில் உருக்கி வார்த்தவர்

போலிருக்கிறார்களே என்றுசொல்லி மகிழ்ந்தார்கள். அந்தப் பெண்ணினுடைய மாமி மாமன்மார்கள் இதைக்கேட்டு ஆனந்தத்தால் உடம்பு பூரித்து அவளை மிகவும் மேன்மையாய்க்கொண்டாடிப் பின்பு தம் மூத்தமருமகள் அண்டை அழைத்துக்கொண்டுபோனார்கள். அவளைப் போய்ப்பார்த்ததும் இவள்தான் நம் உடன் பிறந்தாளென்று தெரிந்து அந்தச் சிற்றரசி மிக்க சந்தோஷமடைந்து உடனே அவளை அணைத்து முத்தமிட்டுக்கொண்டாள். அத்தருணத்தில் அவ்விருவருடைய மனநிலையும் இத்தன்மையாயிருந்ததென்று எடுத்துரைக்க எவராலுமாகாது. இவ்வதிசயச்செய்தி அப்பட்டணமெங்கும் பரவ, அன்றையதினத்தை அந்நகரத்தார் அனைவரும் ஒரு மகோற்சவமாகக் கொண்டாடினார்கள். அன்று முதல் அவ்விரண்டு ராஜகுமாரத்திகளும் முன்னிலும் அதிக அன்புற்றவர்களாய் ஆயுளளவும் சுகமாக வாழ்ந்திருந்தார்கள்.

# கிருமிசாஸ்திரப்பயிற்சி

(தொடர்ச்சி.).

ஜந்துவர்க்கங்களில் பல விநோதமான காட்சிகளும் செய்கைகளும் காணப்படுகின்றனவென்று சென்ற சஞ்சிகையிற் சொன்னோமே. அதற்குத் திஷ்டாந்தமாய்ச் சிலவற்றை எடுத்துக்காட்டுகிறோம். ஜந்துக்களுள் அநேகம் நமக்குப் பலவிதமாய் உபயோகப்படுகின்றன; அநேகம் ஜந்துக்கள் விசேஷ சவுக்கியத்தைத் தருகின்றன; அநேகம் ஜந்துக்களில் நாம் கவுரவப்படுத்தத்தக்க சிறந்த குணங்கள் காணப்படுகின்றன. பசுமாடுகளின் பொறுமையும், குதிரைகளின் பெருமையும், யானைகளின் புத்திகூர்மையும், நாய்களின் ஒப்பற்ற நன்றியறிதலும் யாவர்க்கும் நன்றாய்த் தெரிந்தவைகளல்லவா?

தரையில் வாழ்கின்ற சிறிய ஜந்துக்களையும், அநேகம் நீர்வாழ் ஜந்துக்களையும் நாம் விசேஷமாய்க் கவனிப்பதில்லை. அவற்றுள் யாவரும்பார்த்து அதிசயிக்கத்தக்க அழகுடைய ஜந்துக்கள் அநேகமுண்டு. அவற்றின் பளபளப்பான மேனியும், ஊடுருவிப்பார்க்கத்தக்க காந்தியுள்ள ரக்கைகளும், வெகு நுட்பமாய்ச் சித்திரவேலைகள் அமைந்த வடிவழகும் அவைகளைப் படைப்பித்தவனுடைய சாமர்த்தியத்தைத் தெளிவாய்க் காட்டுகின்றன. மிகவும் சாந்தகுணமுள்ள சிறு ஜந்துக்களைப்பார்த்தால் அவைகளிடத்தில் கடவுள் வைத்திருக்கிற கவனம் இப்படிப்பட்டதென்று நன்றாய்த் தெரியும். அவைகளுடைய வழக்கங்களை நாம் ஊற்றமாய்ப் பார்ப்போமானால், நாம் எல்லாம் அதிசயிக்கத்தக்க புத்திகூர்மை

யும் திறமையும் அவற்றுள் அமைந்திருக்கின்றனவென்றும், அவைகளை நாம் ஒருவகையிலும் வருத்தக்கூடாதென்றும் நமக்கு நன்ருய்த் தோன்றும்.

வெகுகாலமாகப் புத்திமான்கள் தேனீக்களுடைய செய்கைகளையும் வழக்கங்களையுங்கண்டு விசேஷமாய் வியந்துகொண்டிருக்கிருர்கள். தேனீயானது உழைப்பின் சிறப்பு இத்தன்மையதென்று மனிதர்களுக்கு நன்ருய்க் காட்டுகின்றது. அது மிகவும் விடியனேரத்திலே எழுந்து மதுரமாய்ப் பாடிக்கொண்டு காலைவேளையில் வெகு அழகாய்ப் பளபளப்புடன் பிரகாசிக்கின்ற மனோகரமான மலர்களின் மகரந்தங்களைச் சேகரிப்பதனுல், யாவரும் இப்படியே சிற்றஞ்சிறுகாலே எழுந்து அவரவர் செய்யவேண்டிய தினக் கடன்களைக் கழித்துக் கடவுளைத் தொழவேண்டுமென்பதைக் கற்பிக்கின்றது. நல்ல வசந்தகாலத்தில் மிகவும் சமர்த்தனுன ஒருவன் ஒரு தேன்கூட்டை ஊற்றமாய்ப் பரிசோதித்துப்பார்ப்பானுனுல், ஆவலுடன் உழைத்து வேலைசெய்கின்ற குடிகளடர்ந்த நகரமொன்று உடனே அவனுடைய நினைப்பில் வரும். பொருள் தேடிக்கொண்டுவருவதற்காக ஒரு கூட்டம் ஈக்கள் கூட்டினின்றும் வெளியேபோகப் புறப்பட்டும், ஒரு கூட்டம் தாங்கள் சேகரித்த பொருளை வைப்பதற்காகக் கூட்டிற்குத் திரும்பிவரும்; சில ஈக்கள் கூட்டுக்குள்ளேயேயிருந்து புதிதாய்ச் சில அறைகள் கட்டுவதும், சீர்கெட்டுப்போன அறைகளைப் பழுதுபார்ப்பதுமாயிருக்கும்; சில ஈக்கள் குட்டிகளைக் காப்பாற்றுவதே வேலையாயிருக்கும்; சில தமது கூட்டுக்குள் துஷ்டஜந்து ஒன்றும் வந்து நுழையாதபடி பத்திரமாய்க் காவல்காத்துக்கொண்டிருக்கும்; சில தம்மினத்துள் இறந்துபோகின்றவைகளை இழுத்துக்கொண்டுபோய் வெளியே விடுவதே வேலையாயிருக்கும். இப்படி வெளியேபோய் வேலைசெய்வது கூட்டுக்குள்ளேயே நின்று குஞ்சுகளைக் காப்பாற்றுவது தங்கள் நிதியைப் பத்திரமாய்க் காப்பதற்குவேண்டிய உபாயங்கள் செய்வது முதலியவெல்லாம் ஒரு தடையுமில்லாமல் சரியாக நடந்துவருகின்றன. மேலும் யாவரும் உலகத்தில் நடக்கவேண்டிய ஒழுங்கு இத்தன்மையதென்றும் தேனீக்கள் நமக்குக் காட்டுகின்றன. அவைகளுள் ஒரு ஈ அந்தக் கூட்டத்திற்கு அரசனுயிருந்து வெகு நன்ருய் ஆண்டுவருகின்றது. அந்த ஈ அரசனிடத்தில் மற்ற ஈக்கள் பிரீதியும் கவுரவமுமாய்க் கீழ்ப்படிந்து யாவரும் பார்த்து அதிசயப்படும்படி எல்லாக் காரியங்களையும் நடத்துகின்றன. யாராயினும் வந்து தங்களைத் துன்பப்படுத்திஞலல்லது தேனீக்கள் தங்கள் கொடுக்கை ஒருவரிடத்திலும் உபயோகப்படுத்துவதில்லை.

குளவி தேனீயைப்போல் அவ்வளவு விரும்பத்தக்க பிராணியுமல்ல, அவ்வளவு உபயோகமானதுமல்ல. ஆயினும் அதிக புத்தி

கூர்மையும் சாமர்த்தியமும் உடையது. அது கட்டுகிற கூடுகளில் அதின் திறமை நன்ருய் விளங்கும். மரப்பொந்துகளிலாயினும் தரையிலாயினும் குளவிகள் கூடுகட்டுவதுண்டு. அந்தக் கூடுகள் நன்ருய்ச் சுற்றிச் சுவரெடுத்து இருபுறத்திலும் வழிவிடப்பட்டிருக்கும். அந்தக் கூடுகளுள் குட்டிகள் வசிப்பதற்காக அறைகளும் அநேகம் அமைக்கப்படும். சுபாவத்தில் குளவிகள் கெட்டகுண முடையவையாயினும், தம் குட்டிகளிடத்தில் விசுவாசமும், கூட்டினிடத்தில் அபிமானமும் அவற்றிற்கு அதிகம்.

எறும்புகள் அதிக உழைப்பாளிகளான பிராணிகளுக்கெல்லாம் முதன்மையான திருஷ்டாந்தமாயிருக்கின்றன. எறும்புகளுக்கு முன்ஜாக்கிரதை மிகவும் அதிகம். ஏதாவது ஒரு எறும்பு இழுக்க மாட்டாத சுமையொன்றை இழுத்து வருந்திக்கொண்டிருக்கக்கண்டால் உடனே பதினுயிரம் எறும்பு அதற்குத் துணைசெய்ய ஓடிவரும். அந்தச் சுமை எப்படிப்பட்டதாயிருந்தாலும் அதைத் தங்கள் வளைக்குள் கொண்டுசேர்க்காமல் விடுவதில்லை. எறும்புப் பாழிக்குள் படிப்படியாய்ப் பல அறைகள் அமைக்கப்பட்டிருக்கும். அந்தப் பாழிகளை யாராயினும் இடித்துப்போடுவார்களானுல் எறும்புகள் அவர்களுக்கு யாதொரு தீங்கும் செய்யக் கருதாமல் பொறுத்துக்கொண்டு மற்றெரு இடத்திற்குப்போய் அங்கே தங்களுக்கு இருப்பிடம் ஏற்படுத்திக்கொள்ளும். உலகத்தில் எறும்புகள் ஒப்பற்ற பொறுமையும் உழைப்பும் முன்யோசனையும் உள்ள பிராணிகள். எறும்புகளின் திறமையும் விடாமுயற்சியும் சென்ற மார்ச்சு மாதச் சஞ்சிகையில் ஜீவஜந்துக்களின் பாஷையைப்பற்றிய விஷயத்தைப் படித்துப்பார்த்தால் தெளிவாய்த் தெரியும்.

சிதல்கள் அதிக வலிவுள்ள பிராணிகள். உஷ்ணதேசங்களிலே தான் அவை அதிகமாய்க் குடிகொண்டிருக்கும். அவை கட்டுகிற புற்றுகள் ஒவ்வொரு வேளைகளில் வெகு நன்ருய்ப் பத்து பனிரண்டு அடியுயரம்வரைக்கும் கட்டப்பட்டிருக்கும். சிதல்களுக்கு மிகவும் விருப்பமான உணவு கட்டைமரங்களே. அவற்றிற்குப் பசியும் வலிமையும் அதிகமாயிருப்பதால் அவை எதிலே வாயை வைத்தாலும் அதை அரித்து நாசமாக்கிவிடும்.

பூச்சிகளுள் சிலந்தி மிகவும் சிறந்தது. அது எத்தனைதூரம் எவ்வளவுகூடு கட்டவேண்டுமானுலும் அவ்வளவுக்கும் போதுமான நூலை அதன் வயிற்றுக்குள்ளே கடவுள் அமைத்திருக்கிருர். சிலந்தி பூச்சிகளைப் புசிக்கின்ற ஜந்துவாதலால் அவ்விரையைப் பிடிக்கவேண்டிய விஷயத்தில் அது வெகு சாமர்த்தியமுடையதாயிருக்கின்றது. தன்னைக் கண்டு தனக்கு இரையாய் வருகின்ற பூச்சிகள் பயந்தோடிப்போகுமென்று எண்ணிச் சிலந்தி பட்டுபோல மிகவும் மெதுவான இருப்பிடமொன்று தனக்கு ஏற்படுத்திக்கொண்டு அதில்

தப்பூமி இருக்குமளவும் இந்தத்தோன்றலும் திரிதலும் ஓயாமல் நடந்துகொண்டேயிருக்குமென்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை.

செயில்வண்டியில் ஏறிக்கொண்டு இப்பூமியில் யாத்திரைசெய்வோமானால், அப்போது நமது கண்ணுக்குத் தோன்றாத எவ்வகைப் பொருளும் இப்பூமியில் இருப்பது அருமையாதலால், பூமிகரண சாஸ்திரத்தின் உண்மைகளைக் கண்டறிவதற்கு அதுதான் மிகவும் ஏற்ற தருணமாயிருக்கிறது. அப்படி ஒரு யாத்திரையை நாம் ஏற்றுக்கொண்டதாய் வைத்துக்கொள்வோம். அப்படிப் போவோமானால், ஓங்கிவளர்ந்த நிழல்மாங்களும் கனிமரங்களும் நிறைந்து அழகிய காடுகளும், நெற்கதிர்கள் குலைகுலையாய்த் தொங்குகின்ற வயல்களும், அசைத்தசைத்து மேய்கிற மாடுகளும் துடித்து விளையாடுகின்ற ஆட்டுக்குட்டிகளும் நிறைந்த அநேகம் பசும்புற்றரைகளுமாய் ஒருபுறத்தில் காணப்படும். உடனே கொஞ்சநேரத்தில் மரஞ்செடியொன்றுமில்லாத பாலைநிலமொன்றுதோன்றும்; இன்னும் கொஞ்சநேரத்தில், குன்றுகளும் மலைகளுமாய் அநேகம் காணப்படும். இன்னும் ஒரு நிமிஷத்தில் திடீரென்று பெரும்பள்ளமொன்று கண்ணுக்குத்தோன்றும். அந்தப் பள்ளத்தினின்றும் மேலெழும்போது அதன் பக்கங்களைப் பரிசோதித்துப்பார்த்தால், அவை முழுதும் மிக்க உறுதியும் பருமனுமுள்ள மங்கலான ஒருவகைப் பெரும்பாறைகள் காணப்படும். அந்தக் கடினமான கற்கள்தாம் முதலில் உண்டானபடியே சிறிதும் கரையாமலிருக்கின்ற கற்கள். இப்பூமியின் மையத்திலிருக்கின்ற அக்கினியின் வேகத்தால் அங்கிருந்து வெளியே தள்ளப்பட்டவைகளாதலால், அந்தக் கற்களுக்கு அக்கினிக்கற்களென்று பெயர். இக்கற்களுள் கருங்கல், மடிப்புக்கல், எரிகல் என மூன்றுவிதமுண்டு.

அங்கிருந்து இன்னும் சிறிதுதூரம் போவோமானால், நீரின் வலிமையால் ஏற்படுத்தப்பட்ட கற்களுள்ள ஓரிடம்போய்ச் சேருவோம். இங்குள்ள கற்களுக்கும் முன்கண்ட கற்களுக்குமுள்ள வேற்றுமையைச் சற்று நிதானித்துப்பார்ப்போம். முன்பார்த்த கற்கள் மிக்க உறுதியான ஓரே மொத்தமாயிருந்தனவல்லவா? இந்தக் கற்கள் மேஜைமேல் புத்தகங்கள் அடுக்கியிருப்பதுபோலவும், ஒரு வீட்டுச்சுவரில் செங்கல் அடுக்கியிருப்பதுபோலவும் ஒன்றின்மேலொன்றாய்ப் புரைபுரையாகக் காணப்படும். இவை புரைபுரையாயிருப்பதால் புரைசற்கற்களென்றும், நீரின்வேகத்தால் உண்டுபண்ணப்பட்டவையாதலால் நீர்க்கற்களென்றும் சொல்லப்படும்.

இவ்விடத்தில் இந்தக் கற்களின் புரைகளெல்லாம் சிறிதும் கோணாமல் நேருக்குநேராய் அமைந்திருக்கின்றன. அங்கிருந்து அப்புறம்போவோமானால் மற்றோரிடத்தில் அந்தப் புரைகள் ஒன்றின்மேல் ஒன்றாய்ச் சாய்வாகப் படர்ந்திருக்கக்காண்போம். இதற்குக் காரணம் என்னவெனில், எப்பொழுதோ ஒருகாலத்தில் பூமியின்

கீழ்ப்புறத்திலிருந்து கடினமான கற்கள் மேலே கிளம்பி அவற்றின் மேல் தாக்கினதனால் அவை அப்படியாயின. மற்றோரிடத்தில் அவை ஒன்றுக்கொன்று எதிராகக் கீழ்முகமாய்ச் சாய்ந்திருக் கக்காணப்படும். சிலவிடங்களில் ஒரே முனையில்மட்டும் கற்கள் புரைபுரையாயிருக்கக் காணப்படும்; வேறு சிலவிடங்களில் அந் தப் புரைகளின் ஒரே ஒரு பாகம்மட்டும் அதன் மட்டத்திற்குச் சரியாயிராமல் ஒதுங்கியிருக்கக்காண்போம். இப்படி வெவ்வேறு வகையாய்த் தோற்றுவதேனெனில், முதலில் ஒரு கல்மேல் மற் றொன்றுவந்து தாக்கும்போது அதன் வேகங்கள் வேறுபடுவதாலும் ஒவ்வோரிடத்தில் திடீரென்றுவந்து தாக்குவதாலும் இப்படியா கின்றது.

நீர்வேகத்தால் கரையாத கடினமான கற்களுள் கருங்கல் மிக வும் சிறந்தது. கருங்கற்களுள் பலவிடங்களில் பலவிதங்கள் காணப்படும். அவை மிக்க அழகும் உறுதியும் உடையவையாத லால், உறுதியான கட்டடங்கள் கட்டுவதற்கு மிகவும் அனுகூல மான கருவியாயிருக்கின்றன.

(இன்னும் வரும்.)

## மூன்று ராஜகுமாரர்கள்.

முன் ஒருகாலத்தில் ஒரு அரசனுக்கு மூன்று பிள்ளைகள் இருந் தார்கள். மூத்தகுமாரர்களிருவரும் வேட்டையாட வேண்டு மென்று விருப்பங்கொண்டு ஒருநாள் காட்டுக்குப்போனார்கள். போனவர்கள் அங்கேயே விநோதமாய்த் திரிந்துகொண்டிருந் தார்கள். மறுபடி பட்டணத்திற்குத் திரும்பிவரவேயில்லை. அவர்கள் போனவழி தெரியாமற்போகவே இளையகுமாரன் அவர்களைத் தேடிக்கொண்டுபோனான். இதற்குள் மூத்தவர்கள் இருவரும் நாக ரிகநடக்கையெல்லாம்விட்டுக் காட்டுமனிதரோடு காட்டுமனிதராய் அங்கேயே குடிகொண்டிருந்தார்கள். அவர்களைத் தேடிப்போன இளையவன் எப்படியோ அவர்களிருக்குமிடம் கண்டுபிடித்து அவ்விடத்துச்சென்றான். அவனைப் பார்த்ததும் அவனுடைய நாக ரிகமான நடவடிக்கைகளைக்கண்டு காட்டுமனிதர்களாயிருந்த மூத்த குமாரர்கள் இருவரும் அவனை மிகவும் ஏளனஞ்செய்யத் தொடங் கினார்கள்.

இளையவன் தமயன்மார்களைப் போய்க்கண்டதும் அவர்களைத் தண்டனிட்டுப் பட்டணத்திற்குத் திரும்பிவரும்படி நயமாய் வேண்டியழைத்தான். என்னவேண்டியும் அதைக் கேளாமல் அவர்கள் தங்கள் மனம்போனபடியே போய்க்கொண்டிருந்தார் கள். எங்கேபோகிறார்களோ பார்ப்போமென்று இளையவனும்

அவர்களைப் பின்தொடர்ந்துபோனான். வழியில் ஒரு எறும்புப் புற்றைக்கண்டு மூத்தகுமாரர்கள் இருவரும், எறும்புகள் நம்மைக் கண்டு பயந்து நாலாமூலையிலும் முட்டைகொண்டு ஓடும் விதத்தைக்கண்டு களிப்படையும்படி அந்தப் புற்றை இடிக்கமுயன்றார்கள். அதுதெரிந்து சிறுவன்: ஐயோ பாவம்! இந்தப் பூச்சிகளை வருத்தி நமக்காவதென்ன? நமது வழியே நாம் போவோம் என்று சொல்லி அவர்களை மறுத்தான். அதை அப்படியே அங்கீகரித்து அவர்கள் அப்புறம்போனார்கள். அங்கிருந்து சிறிதுதூரம்போகையில் வழியிலே ஒரு ஏரியில் அநேகம் வாத்துகள் நீந்தி விளையாடிக் கொண்டிருக்கக்கண்டு, மூத்தவர்களிருவரும் அவைகளுள் இரண்டைப் பிடித்துக்கொல்லக் கருதினார்கள். அதுதெரிந்து, சிறுவன், இவைகளை நாம் பிடித்துக்கொல்லவேண்டாம், தண்ணீரில் விநோதமாய் நீந்தி விளையாடுகின்றவைகளை நாம் பிடித்து வதைப்பானேன் என்றுசொல்லி மறுத்தான். அதையும் அவர்கள் அப்படியே சம்மதித்து அங்கிருந்து அப்புறம்போனார்கள். போகையில், வழியே பெரிய தேன்கூடொன்றைக்கண்டு பெரியவர்கள் ஈக்களையெல்லாம் பிடித்தடித்துத் தேனைக் குடிக்கும்படி அம்மரத்தின்கீழே உட்காந்ததுகண்டு இளையவன் ஐயோ! இந்த எளிய ஈக்கள் இவ்வளவு தேன்சேர்ப்பதற்கு எத்தனைநாள் வருந்தினவோ! இது நமக்கு வேண்டாம். ஒருவர் தேடியபொருளை ஒருவர் அபகரிப்பது நியாயமன்று என அவர்களுக்கு நல்லவார்த்தையாய்ச்சொல்லி அந்தத் தேனீக்களையும் தப்புவித்தான்.

அங்கிருந்து மூவரும் அப்புறம்போகையில் பொழுதுபோய் அருகிலிருந்த ஒரு பெரிய மாளிகைபோய்ச்சேர்ந்தார்கள். அதில் எங்கேபார்த்தாலும் கற்குதிரைகளும் கல்யானைகளுமாய் அநேகங் கற்கள் காணப்பட்டனவேயொழிய மனிதனொருவனும் தென்படவில்லை. முழுதும் சுற்றிப்பார்த்துக் கடைசியில் ஒரு மண்டபத்திற் சென்றார்கள். அங்கே இரண்டு மூன்று பூட்டுபூட்டி அறையொன்றிருந்தது. அதன் கதவிலிருந்த சிறுதுவாரத்தால் அவர்கள் உள்ளே எட்டிப்பார்க்க, அங்கே ஒரு மனிதன் உட்காந்திருக்கக் கண்டு அவனை இரண்டுதரம் கூவினார்கள்; அவன் உட்காந்த விடத்தைவிட்டு அசையவேயில்லை. மூன்றாந்தரம் கூவினதைக் கேட்டு அவன் எழுந்துவந்து கதவைத்திறந்து அவர்களை உள்ளே அழைத்துக்கொண்டுபோய் அவர்களுக்குப் பலவிதமாய் உபசாரஞ்செய்து விருந்தளித்துச் சிறந்த ஒரு படுக்கையில் படுக்கச்செய்தான்.

மறுநாள் காலையில் எழுந்து அவர்கள், இவ்விடமெங்கும் கற்கள் தவிர மற்றொன்றும் காணப்படவில்லையே, இதன் செய்தி என்னவென்று கேட்க, அந்த மனிதன் அவர்களை அழைத்துக்கொண்டு போய் அண்டையில் ஒரு கற்சுவரில் எழுதியிருந்ததைக் காட்டி

ஞன். அதில் மூன்று செய்தி எழுதியிருந்தன. முதலாவது. அடுத்தகாட்டில் புற்றறையிலே ஒரு ராஜகுமாரத்தியின் முத்துகள் ஆயிரம் விழுந்துகிடக்கின்றன. அவற்றைக் கண்டெடுத்துக் கொடுப் பவனையே அந்த ராஜகுமாரத்தி கலியாணஞ்செய்துகொள்ளத் தீர்மானித்திருக்கிறாள். அவற்றைத் தேடப்போகிறவன் பொழுதுபோவதற்குமுன்னமே ஆயிரம் முத்துக்களையும் பொறுக்கிக்கொண்டு வரவேண்டும். ஒன்று குறைந்தாலும் அதைத் தேடிப்போனவன் உடனே கல்லாய் மாறிப்போவான் என்றிருந்தது. அதைப்பார்த்து மூத்தகுமாரன் நான் இக்காரியத்தை முடித்துக்கொண்டு வருகிறேனென்று சொல்லிப்போய்ப் பொழுதுபோவதற்குள் நூறே நூறு முத்துபொறுக்கிப் பொழுதுபோனவுடன் கல்லாய்ப்போய்விட்டான். மூத்தவன் திரும்பிவராமற்போகவே, மறுநாள் இரண்டாங் குமாரன் நான்போய் இதைச் சாதித்துக்கொண்டுவருகிறேனென்று போயினுன். அவனும் இருநூறுமுத்துக்குமேல் பொறுக்கமாட்டாமல் தமையனுக்குத் துணையாய்ப்போனுன்.

இப்போது கடைக்குமாரனே போகவேண்டியதாயிற்று; அவன் அந்தப் புற்றரையில் போய்ப்பார்த்து இந்த ஆயிரம் முத்துக்களையும் எப்படி பொறுக்கியெடுக்கிறதென்று திகில்டைந்து புலம்பத்தொடங்கினுன். அதைக்கேட்டு, முன் இவனுல் பிழைப்பூட்டப்பட்ட எறும்புகள் அநேகம்வந்து ஒரேநிமிஷத்தில் ஆயிரம் முத்துக்களையும் பொறுக்கிக் கும்பலாய்ச் சேர்த்தன.

அந்தக் கற்சுவரில் எழுதியிருந்த இரண்டாவது செய்தியாவது: அந்த ராஜகன்னிகை படுத்திருக்கும் அறையின் திறவுகோலை, இவர்கள் வரும்போது வழியிலே கண்ட ஏரியினின்றும் எடுத்துக்கொண்டுவரவேண்டுமென்றிருந்தது. அதுகண்டு அந்த ராஜகுமாரன் அந்தத் தடாகத்திற்குச் சென்றுன். அங்கேபோய் இவன் அந்தத் திறவுகோலை எடுக்கவேண்டியவழி தெரியாமல் தவித்ததைக்கண்டு, முன்பு இவனுல் உயிர் மீட்கப்பட்ட வாத்துகள் உடனே தண்ணீரில் மூழ்கி அந்தத் திறவுகோலைத் தேடிக்கொண்டு வந்து கொடுத்தன.

அந்தச் சுவரில் எழுதியிருந்த மூன்றுவது செய்தியை நிறைவேற்றுவது மிகவும் வருத்தமானது. அழகிலும் சாயலிலும் உருவதிலும் நிறத்திலும் மிகவும் ஒத்தவர்களான மூன்று ராஜகுமாரத்திகளுள்ளும் மிகவும் ரூபவதியான கடைசிப்பெண்ணைக் கண்டறியவேண்டுமென்றிருந்தது. இந்த ராஜகுமாரன் திறவுகோலைக்கொண்டுபோய் ராஜகுமாரத்திகளிருக்கும் அறையைத்திறந்துபார்த்தபோது அம்மூவரும் தூங்கிக்கொண்டிருந்தார்கள். அவர்களுள் ஒருவிதமான பேதமும் காணப்படவில்லை. அவர்கள் படுப்பதற்குமுன், மூத்தவள் ஒருகட்டி கற்கண்டும், நடுப்பெண் கொஞ்சம் பாலும், கடைப்பெண் கொஞ்சம் தேனும் புசித்